IN THE EXAMINATION OF THE WITNESS
(Section 281 Code of Criminal Procedure)
THE JUDICIAL MAGISTRATE COURT, VALLIYOOR

**CC. 419/2017 PW. 6**

STATEMENT OF WITNESS

| | | |
|---|---|---|
| பெயர் | - | புகழேந்தி ( வனச்சரக அலுவலர் ) |
| தந்தை/கணவர் பெயர் | - | |
| வயது | - | |
| ஊர் | - | |
| மதம் | - | |

**முதல் விசாரணை** Date: 09/05/2019

நான் தற்போது களக்காடு வனசரகத்தில் வனக்காவலராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 22/06/16 அன்று நள்ளிரவு 11 மணியளவில் திருக்குறுங்குடி வனச்சரக அலுவலகத்திற்கு கிடைத்த தகவலின் பேரில் அப்போது பணியில் இருந்த வனச்சரக அலுவலர் திரு. நடராஜன் மற்றும் அவரது குழுவினர் திருக்குறுங்குடி பீட் தட்ட பொத்தை சராகம் திரு. ராஜமணி மனைவி பூமணி என்பவரின் நிலத்தில் பயிர் குத்தகை எடுத்துள்ள இசக்கி முத்து (எ) சேட்டையன் மற்றும் சேகர் ஆர்.எப் கல் 18 -லிருந்து 135 மீ தொலைவில் இயற்கை நீரூற்று ஒன்று உள்ளது. அதில் உடும்பு ஒன்று நீந்தி கொண்டிருக்கும் போது எதிரிகள் இருவரும் சேர்ந்து உடும்பினை வாலை பிடித்து தூக்கி தரையில் அடித்து கொன்று தீயில் வாட்டி பின்பு தான் அதை அரிவாளால் அறுத்து சிறு துண்டுகளாக வெட்டி தோலை உரித்து சமையல் செய்து இருவரும் சாப்பிட்டதாகவும், சமையலுக்கு சேகர் உதவியதாகவும் அவர்களிடம் கூறியுள்ளார். மீதியிருந்த மாமிசத்தை அவர்களிடம் இருந்த நாய்களுக்கு போட்டு விட்டதாகவும் கூறியுள்ளார். அந்த சமையல் செய்த பாத்திரத்தை தான் கழுவிய போது அவர்கள் சென்றுள்ளார்கள். அப்போது நடராஜன், சக்தி கதிர் காமன், சாமிநாதன் வாச்சன் ஆகியோர் சேர்ந்து எதிரிகளை பிடிக்க முற்பட்ட போது சேகர் தப்பி ஓடியுள்ளார். இசக்கி முத்துவை மட்டும் பிடித்து விட்டு திருக்குறுங்குடி கிராம நிர்வாக அதிகாரிக்கு தகவல் கொடுத்துள்ளார்கள். அவர் வந்த பிறகு இசக்கி முத்துவிடமிருந்து ஒப்புதல் வாக்குமூலம்

வாங்கியுள்ளார்கள். ஹச் நமூனா பதிவு செய்யப்பட்டு வழக்கும் பதிவு செய்யப்பட்டுள்ளது. மேலே குறிப்பிட்ட சம்பவ ஆவணங்களை பரிசீலித்து " அ" படிவம் என்னால் நீதிமன்றத்தில் அனுப்பி வைக்கப் பட்டது. அந்த "அ" படிவம் அ.சா.ஆ. 5.

**<u>எதிரி தரப்பு வழக்கறிஞர் குறுக்கு விசாரணை</u>** - "அ" படிவம் தாக்கல் செய்வதற்கு முன்பு நான் மேற்படி சம்பவ இடத்தின் உரிமையாளரை விசாரிக்கவில்லை. லெவஞ்சிபுரம் கிராம நிர்வாக அலுவலரை மீண்டும் விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்யவில்லை. முந்தைய அதிகாரி விசாரித்த சாட்சிகளை மீண்டும் விசாரிக்காமல் எதிரிகள் மீது குறைபாடுடைய ஆவணங்களை தாக்கல் செய்துளளேன் என்றால் சரியல்ல.